# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

29

1958-ம் ஆண்டு இனக்கலவரம், இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் பிரித்தானிய எஜமானர்கள் அறி



முகப்படுத்திவிட்டுப் போன 'சிலோன் தேசியம்' என்ற கட்டமைப்புக்குள் ஒருபோதும் ஒன்றிணைந்து வாழ முடியாது என்பதை தெட்டத்தெளிவாக நிரூபித்துவிட்டது.

தமிழர்களுக்கு எதிரான இந்த 1958 மே 22, 23-ம் திகதி வன்செயல்கள், 'லும்பன்கள்' என்று அரசியல் குறியீட்டுப் பெயரில் அழைக்கப்படும் உதிரிகளான சிங்களக் காடையர்களால் தன்னிச்சையாகச் செய்யப்பட்ட செயலல்ல. அவை பௌத்த சிங்கள பெருந்தேசியவாதிகளால் நன்கு திட்டமிடப்பட்டு, அமைப்பு ரீதியாக கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளாகும். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து, கருப்பையில் இருந்த குழந்தையை வாளால் குத்தி வெளியே எடுத்து, உயரே தூக்கிப் பிடித்து 'பிறந்த தமிழர்களையும் கொல்லுவோம், பிறக்க இருக்கும் தமிழர்களையும் கொல்லுவோம்' என்று வெறிக் கூச்சலிட்ட செயல் உதிரிகள் (லும்பன்கள்) செய்யக்கூடிய செயலல்ல.

அது தமிழினத்தை கருவிலேயே அழிக்க வேண்டும் என்ற பௌத்த சிங்கள பெருந்தேசிய இனவெறியின் (சாவோனிசம்) வெளிப்பாடாகும். தமிழ் மொழிக்கும் சம உரிமை தராவிட்டால் தனிநாடு கேட்டுப் போராடுவோம் என்று அறிக்கைப் போர் நடத்திய தமிழ் காங்கிரஸ் தலைவர்களிலிருந்து, காலிமுகத் திடலில் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் புகைப்படக் கருவிகளுக்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்திய தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வரை யாருமே இந்த இனக் கலவரத்தை எதிர்த்து தமிழ் மக்களின் சார்பில் குறைந்தபட்சமாக ஒரு அடையாள எதிர்ப்பைக் கூட காண்பிக்கவில்லை.

கலவரத்தில் ஈடுபட்டு, தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்களை கைதுசெய்வதற்குப் பதில்; தங்களைப் பிடித்துச் சிறையில் அடைத்ததற்காவது எதிர்ப்புத் தெரிவித்து குறைந்த பட்சம், அவர்கள் கடைப்பிடித்ததாகச் சொன்ன அகிம்சை வழியில் சிறையில் இருந்துகொண்டே உண்ணாவிரதப் போராவது நடத்தியிருக்கலாம்.

'இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' என்ற நூலில் மு.திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதுபோல் உண்ணாவிரதம் இருந்து இவர்கள் மரணத்தை சந்திக்கத் தயாராக இருக்கவில்லை.

பிரபல இடதுசாரித் தலைவரான நா.சண்முகதாசன் சொல்வதுபோல், இவர்கள் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுகின்றோம் என்று சொல்லிக் கொண்டு, இரண்டில் ஒரு சிங்களக் கட்சியின் மேசையில் அதை விற்பனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்களேயன்றி, உண்மையில் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சரியான வேலைத்திட்டமோ அதற்கான நேர்மையான செயற்பாடுகளோ அவர்களிடம் இருக்கவில்லை.

S.W.R.D. பண்டாரநாயக்காவுடன் தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாக ஒத்துப்போய் ஒப்பந்தம் செய்யத் தயாராக இருந்த இவர்கள், நெற்காணி உச்சவரம்புச் சட்டம், தனியார் பாடசாலைகளை அரசுடமையாக்கியது, சிங்களவர்கள் - தமிழர்கள் என்ற இரு பிரிவினரையும் சேர்ந்த ஏழை மக்களுக்கு பயன்தரக்கூடிய சட்டத்தை எதிர்த்தது அவர்களுடைய வர்க்க நலனை மையப்படுத்திய செயற்பாட்டுக்கு சிறந்த உதாரணமாகும்.



# பௌத்த பிக்குவால் சுட்டுக்கொல்லப்பட்ட பண்டாரநாயக்கா

> கலவரத்தில் ஈடுபட்டு, தமிழ் மக்களைக் கொன்று குவித்தவர்களை கைதுசெய்வதற்குப் பதில்; தங்களைப் பிடித்துச் சிறையில் அடைத்ததற்காவது எதிர்ப்புத் தெரிவித்து குறைந்தபட்சம், அவர்கள் கடைப்பிடித்ததாகச் சொன்ன அகிம்சை வழியில் சிறையில் இருந்துகொண்டே உண்ணாவிரதப் போராவது நடத்தியிருக்கலாம்.

> S.W.R.D. பண்டாரநாயக்காவுடன் தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாக ஒத்துப்போய் ஒப்பந்தம் செய்யத் தயாராக இருந்த இவர்கள், நெற்காணி உச்சவரம்புச் சட்டம், தனியார் பாடசாலைகளை அரசுடமையாக்கியது, சிங்களவர்கள் - தமிழர்கள் என்ற இரு பிரிவினரையும் சேர்ந்த ஏழை மக்களுக்கு பயன்தரக்கூடிய சட்டத்தை எதிர்த்தது அவர்களுடைய வர்க்க நலனை மையப்படுத்திய செயற்பாட்டுக்கு சிறந்த உதாரணமாகும்.

S.W.R.D. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை மாற்றாமல், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ்மொழி அமுலாக்கல் விசேட சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். இச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து சிறையிலேயே இருந்துவந்தனர். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரச நிர்வாகங்களுக்கும் கல்வி சம்பந்தப்பட்ட விடையங்களுக்கும் தமிழை உபயோகிக்கலாம் என்று இந்தச் சட்டம் கூறியது.

ஐக்கிய தேசியக் கட்சியினரும், பௌத்த பிக்குகளும் வழக்கம்போல் இந்தச் சட்டத்துக்கும் பண்டாரநாயக்கா சிங்களவர்களின் உரிமைகளை தமிழர்களுக்கு விற்கிறார் என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

S.W.R.D. பண்டாரநாயக்காவின் ஆளும் ஐக்கிய முன்னணிக்குள்ளேயே (எம்.ஈ.பி.) பிளவு ஏற்பட்டது. விவசாயக் கூட்டுறவு வங்கி விடயம் ஒன்றாலும், நெல்லின் உத்தரவாத விலையைக் கூட்டிய விடயத்திலும் இந்த முரண்பாடு இன்னும் தீவிரமடைந்து பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திலிருந்து பிலிப் குணவர்த்தனாவும், அவரது சகாவான வில்லியம் சில்வாவும் பிரிந்து சென்றனர்.



1959-ல் 'சிங்கள தேசத்தின் தந்தை' என்ற ஒளிவட்டத்தை S.W.R.D. பண்டாரநாயக்கா கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தார். 1958 இனக்கலவரத்துக்குப் பின், கண்டி போகம்பரை சிறைச்சாலை மைதானத்தில் தமிழர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டிய தேவை குறித்து அவர் ஆற்றிய உரை, சிங்கள பௌத்த இனவாதிகளை கொதிப்படைய வைத்துவிட்டது.

1959-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26-ம் திகதி ஐக்கியநாடுகள் சபைக்குச் சென்று அதன் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்கு S.W.R.D. பண்டாரநாயக்காவுக்கு அழைப்புக் கிடைத்திருந்தது.

அந்தப் பயணத்தை மேற்கொள்வதற்காக முதல்நாள் அதாவது, 1959-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25-ம் திகதி அவர் தனது கட்சி உறுப்பினர்கள், மந்திரிகள் முக்கிய ஆதரவாளர்கள் ஆகியோரை தனது வீட்டுக்கு அழைத்து சந்தித்துப் பேசினார். அவரது வீட்டு வரவேற்பறையில் பௌத்த பிக்கு ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டு அவரிடம் ஆசி பெறுவதற்காக S.W.R.D. பண்டாரநாயக்கா அவர் அருகில் சென்று குனிந்தபோது, அந்தப் பௌத்த பிக்கு தனது மஞ்சள் உடைக்குள் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அவரது மார்பில் சுட்டுவிட்டார். அங்கிருந்த ஆதரவாளர்கள் அந்தப் பிக்குவை அடித்துக் கொல்ல முற்பட்டபோது, 'அவருக்கு எதுவும் செய்ய வேண்டாம். அவரை மன்னித்துவிடுங்கள்' என்று கூறிய பண்டாரநாயக்கா மறுநாள் 26.09.1959-ம் ஆண்டு வைத்திய சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார்.

சாகும் தறுவாயில் தன்னைச் சுட்ட பிக்குவை மன்னித்துவிடும்படி அவர் கோரியது, சிங்கள மக்கள் மத்தியில் பிரகாசம் குறைந்திருந்த அவர் மீதான ஒளிவட்டம், அவரது இறப்புக்குப் பின், முன்பு இருந்ததைவிட பன்மடங்கு அதிகமாகப் பிரகாசிக்க ஆரம்பித்தது. பண்டாரநாயக்கா சகாப்தம், பண்டாரநாயக்கா கொள்கைகள் என்று எல்லோரும் அவர் புகழ் பாட ஆரம்பித்தனர்.

**- நக்கீரன்**

படிப்பகம்